# கோயில் நிலத்தில் ஓர் அங்குலத்தைக்கூட ஆக்கிரமிக்க அனுமதிக்க மாட்டோம்

**சென்னை, ஜூலை 14:** பழனி தண்டபாணி சுவாமி அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான 1.40 ஏக்கர் நிலம் முறைகேடாகப் பத்திரப் பதிவு செய்யப்பட்ட விவகாரத்தில் தனது உறவினருக்கு தொடர்புடையதாக வெளியான தகவலுக்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் விளக்கமளித்தார்.

சென்னையில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: எனது உறவினர்கள் கோயில் நிலத்தை வாங்கியதாக வெளியான தகவல் முற்றிலும் பொய்யானது. அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்த சிலர் திட்டமிட்டு அவதூறு பரப்புகின்றனர். இந்த வழக்கில் அறநிலையத் துறையும் மனுதாரராக இணைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணை நடைபெற்றுவரும் நிலையில், சம்பந்தப்பட்ட நிலம் நிச்சயமாக மீட்கப்படும். முறைகேடு தொடர்பாக சார்பதிவாளர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்; தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கோயில் நிலத்தில் ஓர் அங்குலத்தைக்கூட ஆக்கிரமிக்க அனுமதிக்க மாட்டோம்' என்றார்.

கரூர் கல்யாண பசுபதீஸ்வரர் கோயில், புகழிமலை பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், குப்புச்சிபாளையம் ரவீஸ்வரர் கோயில், வெஞ்சமாங்கூடலூர் விக்ருதீஸ்வரர் கோயில் நிலங்களை பத்திரப் பதிவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது தொடர்பாக அமைச்சர் கூறுகையில், 'கோயில் நிலங்களை பட்டா வழங்கிவிட்டதாக சமூக வலைதளங்களில் பரவும் தகவல்கள் உண்மையல்ல. இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளுக்கு முன்பே உரிய ஆய்வுக்குப் பிறகு தனிநபர்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலங்கள் மட்டுமே தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. கோயில்களுக்கு சொந்தமான 2,024 சர்வே எண்கள் கொண்ட நிலங்கள் தொடர்ந்து தடைப் பட்டியலிலேயே உள்ளன. கோயில் நிலங்களுக்கு புதிதாக பட்டா வழங்கப்படவில்லை; பழைய ஆவணங்கள், வருவாய்ப் பதிவுகள் மற்றும் நிலுவை வழக்குகள் இல்லாததை உறுதி செய்த பிறகே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன' என்றார்.

# தேசிய நல்லாசிரியர் விருது: விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

**சென்னை, ஜூலை 14:** தேசிய நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசு தலைவர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளையொட்டி (செப்.5) சிறந்த அரசு, அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மத்திய அரசு சார்பில் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படும். அதன்படி, நிகழாண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கான விண்ணப்பப் பதிவு கடந்த ஜூன் 15 தொடங்கி ஜூலை 13-ஆம் தேதியுடன் நிறைவுப் பெற்றது.

இந்த நிலையில், தேசிய நல்லாசிரியர் விருதுக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஜூலை 17-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தகுதியுள்ளவர்கள் https://nationalawardstoteachers.education.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஆசிரியர்கள் முறையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்தவர்களில் தகுதியான ஆசிரியர்களை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான மாவட்ட தேர்வுக் குழு தேர்ந்தெடுத்து மாநில தேர்வுக் குழுவுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோயில் நிலங்களை குடியிருப்போருக்கு வழங்கும் விவகாரம்

## கரூர் ஆட்சியர் பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, ஜூலை 14:** கோயில் நிலங்களை குடியிருப்போருக்கு பட்டா மாறுதல் செய்து வழங்கும் உத்தரவுகளை ரத்து செய்யக் கோரிய மனு தொடர்பாக கரூர் மாவட்ட ஆட்சியர் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

சேலத்தைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பாலசுப்பிரமணிய சுவாமி, கல்யாண பசுபதீசுவரர், ரவீசுவரர், குப்புச்சிபாளையம் விக்ருதீசுவரர் கோயில்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள 3,084.95 ஏக்கர் நிலங்கள் 15 கிராமங்களில் உள்ளன. இந்த நிலங்கள் 3,390 பேருக்கு மாற்றம் செய்யப்பட்டு, அவர்களது பெயர்களில் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இந்த நிலங்களுக்கு பதிவுத் துறை தரப்பில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பதிவுத் துறை விதித்திருந்த தடையை நீக்கி, கரூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். இது முன் அனுமதி பெறாமல் கோயில் நிலங்களை பத்திரப் பதிவு செய்ய வழிவகை செய்கிறது.

எனவே, பதிவுத் துறை விதித்திருந்த தடையை நீக்கி, கரூர் மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், ஆர். சக்திவேல் அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, கரூர் மாவட்ட ஆட்சியர், கரூர், சென்னை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர்கள் ஆகிய மூவரும் ஒரே நாளில் தடை உத்தரவை நீக்கி உத்தரவு பிறப்பித்துள்ளனர் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

'முந்தைய காலத்தில் கோயில்களுக்கு முன்னதாக, சில இனாம் நிலங்கள் வழங்கப்பட்டன. 1965, 1967-ஆம் ஆண்டுகளில் ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பட்டு, பலருக்கு மாற்றியும் விற்பனை செய்யப்பட்டது. இதுதொடர்பாக விசாரித்ததில், 60 ஆண்டுகளுக்கும் மேலாக மனு அளித்தவர்கள் அங்கு வசிப்பது தெரியவந்தது. இவர்களது கோரிக்கையின் அடிப்படையிலேயே தடை நீக்கப்பட்டது. மேலும், கோயில் தரப்பினருடன் ஆலோசனை செய்தே இந்த முடிவெடுக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் தொடர்பில்லாத மூன்றாம் நபர் வழக்குத் தொடுக்க இயலாது. எனவே, இந்த மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்' என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 50 ஆண்டுகளுக்கு முன்பே பணப் பரிவர்த்தனை இல்லாத தீர்வுப் பத்திர பட்டா (செட்டில்மெண்ட் பட்டா) வழங்கப்பட்டவர்களின் கோரிக்கை அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என கோயில்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

சம்பந்தப்பட்ட நிலங்கள் யாருடைய பெயரில் உள்ளன என்பது குறித்து கரூர் மாவட்ட ஆட்சியர், தமிழக அரசுத் தரப்பில் வருகிற 29-ஆம் தேதி விரிவான பதில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை வருகிற ஆகஸ்ட் 11-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

# தவெக எம்எல்ஏவிடம் பேரம் பேசிய வழக்கு: மேலும் ஒருவர் கைது

**சென்னை, ஜூலை 14:** தவெக எம்எல்ஏவிடம் பேரம் பேசிய வழக்கில், மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி தவெக எம்.எல்.ஏ. இளையராஜா, கடந்த மாதம் 29-ஆம் தேதி சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் ஒரு புகார் அளித்தார். அதில், சட்டப்பேரவையில் பேரவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டால், அவருக்கு எதிராக வாக்களிக்க தன்னிடம் ரூ.35 கோடி பேரம் பேசப்பட்டதாக கூறியிருந்தார்.

இது தொடர்பாக திருவல்லிக்கேணி போலீஸார் வழக்குப் பதிந்து, தேர்தல் கருத்துக் கணிப்பு நிறுவனம் நடத்திவரும் சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு, திருச்சி நரேஷ், மேடவாக்கம் தியாகராஜன் உள்ளிட்ட 11 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில், திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி எம்எல்ஏ, அவர் சகோதரர் அசோக்குமார் ஆகியோர் தான் இந்த சம்பவத்தில் முக்கியமான நபர்கள் என்பதும், இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.200 கோடி வரை செலவிட திட்டமிட்டிருந்ததும் போலீஸாருக்கு தெரியவந்தது.

**மேலும் ஒருவர் கைது:** இந்த வழக்குத் தொடர்பாக 4 பேரை பிடித்து திருவல்லிக்கேணி போலீஸார் செவ்வாய்க்கிழமை விசாரித்தனர். அவர்களில் ஒருவரான மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச் சேர்ந்த சேர்ந்த கணேசன் (43) என்பவரை, இந்த வழக்கில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டவர்கள் அடிக்கடி கைப்பேசியில் தொடர்புகொண்டு பேசியிருப்பது தெரியவந்தது. தீவிர விசாரணையில், அவர், உசிலம்பட்டி தவெக எம்எல்ஏ ம.விஜய் தரப்பைத் தொடர்புகொண்டு, தங்கள் பக்கம் இழுப்பதற்காக பேரம் பேசியிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த பேரத்தை எம்எல்ஏ விஜய்யுடன் நெருக்கமாக இருப்பவர்களிடம் கணேசன் நடத்தியிருப்பது போலீஸார் விசாரணையில் உறுதி செய்துள்ளனர். இதையடுத்து கணேசனை போலீஸார் கைது செய்தனர்.

**அமலாக்கத் துறை விசாரணை:** இந்த வழக்கில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நிகழ்ந்திருப்பதாக அமலாக்கத் துறைக்கு புகார்கள் சென்றன. அந்தப் புகார்களின் அடிப்படையில் இவ் வழக்குத் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணையில் அமலாக்கத் துறை ஈடுபட்டுள்ளது.

**செந்தில் பாலாஜி கடிதம்:** இதற்கிடையே, சென்னை உயர்நீதிமன்றத்தில் நிபந்தனை முன்பிணை பெற்ற செந்தில் பாலாஜி, தனது வழக்குரைஞர் மூலம் ஒரு கடிதத்தை திருவல்லிக்கேணி காவல் நிலையத்துக்கு அனுப்பியுள்ளார். அதில் கூறப்பட்டிருப்பதாவது: வழக்கில் எனது பெயர், எனது சகோதரர் அசோக்குமார் பெயர் இடம்பெறவில்லை.

வழக்கில் எங்களின் பெயர் இல்லாதபோது நாங்கள் எப்படி ஆஜராக முடியும்? வழக்கில் எனது பெயர் இல்லாத நிலையில், போலீஸார் எனக்கு பிஎன்எஸ் சட்டம் 35(3) என்ற பிரிவின் கீழ் நோட்டீஸ் வழங்க வேண்டும். மேலும் நான் இந்த வழக்கின் கீழ் ஆஜராகும் பட்சத்தில், வேறு எந்த வழக்கிலும் என்னை கைது செய்யக் கூடாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, செந்தில் பாலாஜி, அசோக்குமார் ஆகியோரின் பெயர்கள் முதல் தகவல் அறிக்கையில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள கூடுதல் பக்கங்களில் சேர்க்கப்பட்டிருப்பதாக சென்னை காவல் துறையினர் தெரிவித்தனர்.

# தேனீக்கள் கொட்டியதில் 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிப்பு

**கடலூர், ஜூலை 14:** கடலூர் மாவட்டம், மங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் வேப்பமரத்தில் இருந்த மலைத்தேனீக்கள் கலைந்து மாணவர்களைத் தாக்கியதில், 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டனர்.

மங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் வழக்கம் போல்மாணவர்கள் கூடியிருந்த நிலையில், அங்குள்ள வேப்பமரத்தில் இருந்த தேன் கூட்டின் மீது மாணவர் ஒருவர் கற்களை வீசியதாகக் கூறப்படுகிறது. இதில் கூடு கலைந்து, தேனீக்கள் கூட்டமாக பறந்து வந்து பள்ளி வளாகத்தில் இருந்த மாணவர்களை கொட்டத் தொடங்கின.

இதனால் மாணவர்கள் அலறியடித்தபடி அங்கும் இங்கும் ஓடினர். ஆசிரியர்கள் உடனடியாக மாணவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். இருப்பினும் தேனீக்கள் கொட்டியதில் 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் வலியால் அவதிப்பட்டனர்.

தகவலறிந்த சுகாதாரத் துறையினர் பள்ளிக்கு விரைந்து சென்று, பாதிக்கப்பட்ட மாணவர்களை மங்களூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று முதலுதவி சிகிச்சை அளித்தனர். அவர்களில் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த 30 மாணவர்கள் மேல்சிகிச்சைக்காக வேப்பூர் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பாதிப்பில்லாத மற்ற மாணவர்கள் மீண்டும் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு மாணவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், மாணவர்கள் அனைவரும் உடல்நலத்துடன் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். தகவலறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினர் பள்ளிக்குச் சென்று, மாணவர்களுக்கு மீண்டும் ஆபத்து ஏற்படாத வகையில் தேனீக்களை பாதுகாப்பாக அகற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுப்பாக்கம் போலீஸார் செவ்வாய்க்கிழமை வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளி வளாகங்களில் தேனீக்கள் உள்ளிட்ட ஆபத்தான பூச்சிகளின் கூடுகளை முன்கூட்டியே அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களும், பொதுமக்களும் வலியுறுத்தியுள்ளனர்.


பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாக கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422 2231314, 0422-2231345. மொபைல் : 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**
**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 04.08.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**
**முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 04.08.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையாதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள கவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை**

| கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம் | பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்) | அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான கவாதீனம் எடுத்த தேதி ஈ) கவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ கவாதீனம் | 1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை |
|---|---|---|---|
| திருப்பூர் (ID 044900) (குற்போது கோயம்புத்தூர், ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது - 437100) M/s. சியார்ன்ஸ் ஃபேப்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் கடன்தாரர்கள் : M/s.சியார்ன்ஸ் ஃபேப்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட், கதவு எண்.41, 8வது வீதி, நிலை-IV, சிருஷ்டி மஹால், டாடாபாத், கோயம்புத்தூர் - 641 012. மேலும் : 39/93-A, சக்தி நகர், கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் - 641 030. திரு.K.துரைராஜ் (இயக்குநர் மற்றும் அடமானதாரர்), 8A, பூலாங்குளம், குன்னத்தூர், அவிநாசி, திருப்பூர் - 638 103. திரு.V.குகனேஸ்வரன், (இயக்குநர் மற்றும் அடமானதாரர்), 802-B, மீனாட்சி நகர், கணக்கம் பாளையம், திருப்பூர்- 641 666. | (அட்டவணைச் சொத்து) : திரு. K.துரைராஜ் பெயரிலுள்ள சொத்து : (PAN எண். AXRPD5938N)* : I) திருப்பூர் பதிவு மாவட்டம், குன்னத்தூர் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி தாலூகா, குன்னத்தூர் பேரூராட்சி எல்லைக்குள், பூலாங்குளம் கிராம பழைய மறுசர்வே எண்.43-B1 மற்றும் 44, தற்போதைய மறுசர்வே எண்.103/8ல் உள்ள 1.47.5 எக்டர் அதாவது 3.64 ஏக்கரில் 0.68.5 எக்டர் அல்லது 1.69 ஏக்கர் நிலம். எல்லைகள் விபரம் : K.செல்வராஜிற்குச் சொந்தமான 0.07 ஏக்கர் அட்டவணை 'B' நிலங்களுக்கு மற்றும் பொன்மணிக்குச் சொந்தமான கிழமேல் 0.06 ஏக்கர் அட்டவணை E நிலங்களுக்கு வடக்கு, மறு சர்வே எண்.103/6 ல் உள்ள இட்டேரிக்குத் தெற்கு, K.செல்வராஜிற்குச் சொந்தமான 0.07 ஏக்கர் அட்டவணை 'B' நிலங்களுக்கு மற்றும் இட்டேரிக்குக் கிழக்கு, K.செல்வராஜிற்குச் சொந்தமான 0.07 ஏக்கர் அட்டவணை 'B' நிலங்களுக்கு மற்றும் பொன்மணிக்குச் சொந்தமான 0.06 ஏக்கர் அட்டவணை E நிலங்களுக்கு மேற்கு. இதன் நடுவே உள்ள 1.69 ஏக்கர் 0.68.5 எக்டர் தீர்வை ரூ.2.28 நிலமும் அதற்கான லே அவுட் ரோடுகள் மற்றும் சொத்தைச் சென்று சேரும் மாமூல் ரோடுகளின் உரிமையுடன் 250 அடி ஆழக்கிணற்றின் உரிமையுடன், கிழமேல் 23 அடி மற்றும் தென்வடல் 23 அடி என மொத்தம் 529 சதுர அடி ஒட்டுவில்லை கட்டிடத்துடன் | அ) 16.07.2021 ஆ) கணக்கு எண்.0449008700333270- ரூ.13,44,15,079.66 - 30.06.2026 தேதி வரை மற்றும் 01.07.2026 தேதியிலிருந்து பின்வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். கணக்கு எண்.044900ILO00000684 - ரூ.1,27,15,295.00 - 30.06.2026 தேதி வரை மற்றும் 01.07.2026 தேதியிலிருந்து பின்வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன். மொத்தம் நிலுவை : ரூ.14,71,30,374.66 (ரூபாய் பதினான்கு கோடியே எழுபத்து ஒரு லட்சத்து முப்பதாயிரத்து முன்னூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா அறுபத்தாறு மட்டும்) இ) 06.12.2021 ஈ) அடையாளம் | 1) ரூ.2,58,80,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து எட்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) 2) ரூ.25,88,000/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) 3) ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 04.08.2026, (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |

மற்றொரு கட்டிடம், கிழமேல் இருபுறமும் 12 அடி, தென்வடல் இருபுறமும் 23 அடி ஆகமொத்தம் 276 சதுர அடி ACC சிமென்ட் ஷீட் கட்டிடம் ஆகிய கட்டிடங்கள், சிறப்புக் கட்டுமானங்கள், ஆகியவற்றுடன் பழைய கதவு எண்.9A, புதிய எண்.8, வரிவிதிப்பு எண்.1196, 3068, மின்சார இணைப்பு எண்.04-059-001-556 உடன் மின்வடங்கள், காப்புத் தொகைகள், பொருத்தப்பட்ட சாதனங்கள், இதர இணைப்புகள் மற்றும் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகள், அனைத்து இணைப்புகள் முதலியவையும். II) இதே சர்வே எண்ணில் உள்ள கிணறு 0.02.5 எக்டர் அல்லது 0.06 ஏக்கர் இதன் எல்லைகள் விபரம் : K.செல்வராஜிற்குச் சொந்தமான 0.10 ஏக்கர் 'B' அட்டவணை நிலங்களுக்கு வடக்கு, K.செல்வராஜிற்குச் சொந்தமான 1.64 ஏக்கர் 'B' அட்டவணை நிலங்களுக்கு மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு. இதன் மத்தியில் உள்ள 0.06 ஏக்கர் அல்லது 0.02.5 ஹெக்டேர், இதில் பொதுவான அரைப் பங்கு நிலம், அளவாக 0.01.5 எக்டர் அல்லது 0.03 ஏக்கர், கிணறு நிலம் 7.5 H.P மின்சார மோட்டார் பம்செட், மின்சார இணைப்பு எண்.134, நிலத்திற்கான நீர் இணைப்பு எண்.221. ஆக இரண்டு இனங்களும் சேர்ந்து மொத்தம் 1.72 ஏக்கர் அல்லது 0.70.0 எக்டர் (குற்போதைய வருவாய் உட்பிரிவின்படி மேற்சொன்ன நிலங்கள் பட்டா எண்.146ன் கீழ் மறுசர்வே எண்.103/8Bயில் உள்ள 1.44.0 எக்டர் நிலத்தின் பகுதியில் அடங்கியதாகும்) நிலத்துடன் மாமூல் தடவழி உரிமைகளும் பிற அனைத்து உரிமைகள் முதலியனவும் இணைந்த சொத்து. (விரிவான விவரத்திற்கு ஆவண எண்.7028/2008-ஐ காணவும்). (11.11.2025 நாளிட்ட மதிப்பீட்டறிக்கையின்படி, 1.69 ஏக்கர் நிலம் மட்டுமே மதிப்பீட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. கட்டிடங்கள் பழமையுடன் சிதிலமடைந்தும் காணப்படுவதால் இம்மதிப்பீட்டறிக்கையில் பரிசீலிக்கப்படவில்லை).

**அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.265340, 77.412810**

*(மேற்குறிப்பிட்ட சொத்து மற்றொரு NPA கடனான M/s. லேண்ட் மார்க் இம்பெக்ஸ் இன்டர்நேஷனல் கணக்கிற்கும் பிணையமாக நீட்டிக்கப்பட்டுள்ளது).

**மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்**

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **04.08.2026, (செவ்வாய்க்கிழமை) ; காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
**https://baanknet.com & www.pnbindia.in**

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 13.07.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு



pnb Housing Finance Limited
பதிவு அலுவலகம்: 9,ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, K.G. மார்க், புது தில்லி-110001
தொ.பே.: 011-23357171, 23357172, 23705414, இணையத்தளம்: www.pnbhousing.com
கிளை அலுவலகம்: 7990, முதல் தளம், பேட்டுப்பாளையம் ரோடு, சண்முகா திரையரங்கம் அருகில், ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641002

**விதி 8(1) மற்றும் பிற்சேர்க்கை-IV இன்படி அசையாச் சொத்துக்கான கவாதீன அறிவிப்பு**

கீழே கையொப்பமிட்டுள்ளவர் PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-டின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, விதி 8(1)-க்கு இணங்கவும் அதன் பிரிவு 13(12)இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினை / அறிவிப்புகளை ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் தொடர்புடைய கடன்தாரருக்கு / கடன்தாரர்களுக்கு அனுப்பி ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையினை அதனறிவிப்பு நாளிலிருந்து / அதனறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்(கள்) அத்தொகையினை திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், பீடு கையொப்பமிட்டுள்ளவர் மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்படி விதிகளின் விதி 8-இன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள சொத்தை / சொத்துக்களை ஒவ்வொரு கணக்குக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் கவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்கும் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் / அச்சொத்துக்களின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-க்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கடன் ஒப்புக்கொண்டவாறான அதன் வட்டியுடன் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். மேற்படி சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடன்தாரர்கள் கடனீட்டுச் சொத்துக்களை மீட்க இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள்.

| கடன் கணக்கு எண்(கள்) | கட